**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**
**(இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு)**

**தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி-2012.**

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இரு பாலரிடமுமிருந்து 2012ம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*தேவையான ஆகக்குறைந்த தகைமைகள்*

01. (அ) ***வயது:***
2012.03.31ஆம் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வி:***
(i) க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ;/சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

***குறிப்பு:*** தேசிய தொழில் பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினை பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

02 ***பயிற்சி போதனைகள்:***
சிங்களத்தில் எல்லா பாடநெறிகளும், தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறியும் நடத்தப்படும்.

03 **நுளைவுத்தேர்வு:**
தேவையான தகைமைகளையுடைய, கீழே 04ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்

***பரீட்சை நிலையம்:***
அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இவை தவிர வேறு மாவட்டங்களிலிருந்து குறிப்பிட்ட அளவிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் அம்மாவட்டத்திலும் பரீட்சை நிலையம் அமைக்கப்படும்.

***எழுத்துமூல பரீட்சை:***
கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**04. *பரீட்சைக் கட்டணம்:***
பரீட்சைக்கு தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் ரூபா **400/=** ஐ ஏதாவதோர் இலங்கை வங்கிக்கிளையில், கணக்கு இலக்கம்: **681490** மொரட்டுவைக்கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்கூறிய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்கு தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சை கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாக கவனத்திற்கொள்க.

**05. *ஆரம்பத் தேர்வு முறை:***
எழுத்துமூல பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது (இவ் வெட்டுப்புள்ளி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

**06. *இறுதித் தேர்வு முறை:***
நேர்முகப்பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர் செயல்முறைப் பரீட்சையின் 40% உம், நேர்முகப் பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

07. ***பயிற்சி நெறி:***

| | | |
|---|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | -04 | ஆண்டுகள். |
| மில்றைற்/வார்ப்பியல் | -04 | ஆண்டுகள். |
| காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | -03½ | ஆண்டுகள். |
| வலு மின்சாரவியல் | -03½ | ஆண்டுகள். |
| ஆயுத இயந்திரவியல் | -03½ | ஆண்டுகள். |
| வாகன மின்சாரவியல் | -03 | ஆண்டுகள். |
| டீசல் இயந்திரவியல் | -03 | ஆண்டுகள். |
| உருக்கியிணைத்தல் | -03 | ஆண்டுகள். |
| வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் | -03 | ஆண்டுகள். |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக்கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவு செய்யப்படும்

08. ***பிணை முறி கைச்சாத்திடல்:***

04, 03½, 03 வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் இ.ஜே.தொ.ப.நிறுவகத்துடனும் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன் படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

அத்துடன் பயிற்சியின் பின்னர் கேட்டுக்கொள்ளப்பட்டால் இலங்கை போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப யு4 அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி சான்றிதழ்
(இ) இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (இரண்டு அமர்வுகளில் சித்தியடைந்தவர்கள்)
ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப் படத்தப்பட்ட பிரதிகளுடன்

**முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்**
**இல: 582, காலி வீதி,**
**கல்கிசை.**

என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் **முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2012** எனக்குறிப்பிடுதல் வேண்டும்.
(விண்ணப்பப்படிவங்களை **www.cgtti.slt.lk** என்னும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்)

09. ***விண்ணப்ப முடிவு திகதி:***

விண்ணப்பங்கள் 2012.06.20ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதாமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்**
**இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,**
**இல.582,காலி வீதி,**
**கல்கிசை.**
**தொலை பேசி - 011-2605625**